சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.-12வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எபினேசர் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | ஆல்பர்ட்ஜான் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் கடந்த 18.06.2014ம் அன்று காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் இறந்துபோன அருண்ராமின் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்யவேண்டி என்னிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். நான் வேண்டுகோள் கடிதம் பெற்ற பிறகு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று அலுவல் மருத்துவரிடம் கடிதத்தை கொடுத்து ஒப்படைத்தேன்.

2. பின்பு பிரேத பரிசோதனைக்காக அருண்ராம் என்பவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். மேலும் அருண்ராம் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்யும் போது உடன் இருந்து பிரேதபரிசோதனை முடித்து அருண்ராம் பிரேதத்தை அவரின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இறந்து போன அருண்ராமை பிரேதபரிசோதனை செய்யும்போது சேகரித்து தூக்குமாட்டி இறந்த பகுதியான கன்றிய தோல் பகுதி மற்றும் குரல்வளை ஆகியவற்றை கொண்ட விசுராவை அரசு

மருத்துவமனையில் சீல் வைத்து கோவை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டுசென்று ஒப்படைத்தேன்.

3. மேற்படி ரசீது எண்.121/14 பெற்று மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். மேற்கண்ட கணம் நீதிமன்றத்தில் தபால் பெற்று சென்னை தடவியல் அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று அந்த தபாலை ஒப்படைத்தேன். மேற்படி ஆய்வகத்தில் இருந்து பெற்ற தபாலை மேற்கண்ட கணம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதன் பிறகு காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் மேற்கண்ட விவரத்தை சொன்னேன். என்னை வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.